# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2472 - 2026 ජනවාරි මස 16 වැනි සිකුරාදා - 2026.01.16

2472 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, சனவரி மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு – மேல் மாகாணம்**
**மேல் மாகாண மாகாண அரசாங்க சேவையின் கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதாரத் திணைக்களத்தில் தொழிநுட்ப சேவையின் ஆய்வக தொழிநுட்ப வல்லுநர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான (திறந்த) போட்டிப் பரீட்சை - 2025**

01. மேல் மாகாண மாகாண அரசாங்க சேவையின் கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதாரத் திணைக்களத்தில் தொழில்நுட்ப சேவையின் ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் தரம் III பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு மேல் மாகாணத்தில் தொடர்ச்சியாக 03 ஆண்டுகால நிரந்தர வதிவிடத்தினைக் கொண்ட கீழ்வரும் தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை மேல் மாகாண மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எதிர்வரும் தினம் ஒன்றில் நடாத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

02. **சம்பள அளவுத் திட்டம்**
இப்பதவிக்குரிய மாதாந்த சம்பளம் 10/2025 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்படி ரூ. 52,250 –10x800 – 11 x 1190 – 10 x 1320 -10 x 1350 - ரூ.100,040.00 ஆகும். சம்பளக் குறியீட்டு இலக்கம் MN 3-2025 ஆகும். 2027.01.01 ஆம் திகதி முதல் மேற்படி சம்பளம் உரித்தாகும். அதுவரை குறித்த சுற்றறிக்கையின் அட்டவணை III இன் ஏற்பாடுகளுக்கமைய சம்பள கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

03. **வெற்றிடங்களின் எண்ணிக்கை - 03**

04. **தகைமைகள்**

4.1 **கல்வித் தகைமைகள்**
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சையில் இரசாயனவியல் உள்ளிட்ட மேலும் இரண்டு விஞ்ஞானப் பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலுமொரு விடயத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.2 **தொழிற் தகைமைகள்**

இலங்கை இரசாயனவியல் நிறுவனத்தின் இரசாயனவியல் தொடர்பான ஆய்வுகூட தொழிநுட்பவியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை இரசாயனவியல் நிறுவனத்தின் கௌரவ இணை அங்கத்துவம் (L.I.Chem C.) பெற்றிருத்தல்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக் கொண்ட இரசாயனவியல் / ஆய்வுகூட விஞ்ஞான விடயத்துறை தொடர்பான டிப்ளோமா சான்றிழைப் பெற்றிருத்தல்

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் இரசாயனவியல்/ இரசாயன ஆய்வுகூட விஞ்ஞானம் தொடர்பான தேசிய தொழிற் திறன் (NVQ) 06 மட்டத்திலான தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**4.3 அனுபவம் – அவசியமற்றது**

**4.4 உடற் தகுதிகள்**

பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு உகந்த உடல் மற்றும் உளரீதியான தகைமை உடையவராக இருத்தல்.

**4.5 ஏனைய தகைமைகள் :**

i. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
ii. விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல்.
iii. விண்ணப்பம் கோரப்படும் **2026.02.09** ஆம் திகதிக்கு முன்னரான 03 வருடங்கள் மேல் மாகாணத்தில் தொடர்ந்து நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
iv. விண்ணப்பம் கோரப்படும் அறிவிப்பு/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

**4.6 வயதெல்லை :**

2026.02.09 ஆம் திகதிக்கு 18 வருடங்களுக்கு குறையாமலும் 30 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல்.

**05. நிலவும் வெற்றிடங்கள் :**

மேல் மாகாண மாகாண அரசாங்க சேவையில் கொழும்பு மாநகர சபையின் தொழில்நுட்ப சேவையின் ஆய்வுகூட தொழில்நுட்ப வல்லுநர் பதவியில் நிலவும் மொத்த வெற்றிடங்கள் 03 ஆகும். இப்பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் மேல் மாகாண மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உரித்தாகும்.

**5.1. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.02.09 ஆகும்.**

**06. ஆட்சேர்ப்பு முறை:**

மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதாரத் திணைக்களத்தில் தொழில்நுட்ப சேவையின் ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் தரம் III பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைவாக எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டு எழுத்துப் பரீட்சையில் சித்தி பெறுவோர் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் தகைமை வரிசை அடிப்படையில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு தகைமை உடையவர்கள் வெற்றிடங்களுக்காக தெரிவு செய்யப்படுவர்.

இப்பதவிக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய திகதி **2026.02.09** ஆகும். குறித்த திகதியில் இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் அவசியமாகும்.

**07. எழுத்துப் பரீட்சை :**

7.1 எழுத்துப் பரீட்சை 02 வினாத்தாள்களைக் கொண்டது

| *வினாத்தாள்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்குத் தேவையான ஆகக்குறைந்த புள்ளிகள்.* |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| விடய அறிவு | 02 மணித்தியாலம் | 100 | 40 |

**07.2 பரீட்சைக்கான பாடத்திட்டம்**

| *வினாப்பத்திரம்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | தர்க்கிக்கும் ஆற்றல், கணிதத் திறன், தர்க்க ரீதியாக முடிவுகளை மேற்கொள்ளல் மற்றும் நேர முகாமைத்துவம் தொடர்பாக அறிவை அளவிடுவதை நோக்காகக் கொண்ட பல்தேர்வு வினாப்பத்திரம் ஆகும். |
| விடய அறிவு | **ஆய்வுகூட தொழில்நுட்பம் தொடர்பான கொள்கைகள்**<br><br>உணவுகளின் அடிப்படைக் கூறுகள்- ஈரப்பதன், கொழுப்பு, புரோட்டீன், தாதுப் பொருட்கள் மற்றும் காபோவைதரேற்று சதவீதத்தைத் தீர்மானித்தல்.<br><br>தரவுகளைப் பரீட்சித்தல் மாப்பொருட்களைப் பரீட்சித்தல், பால் பகுப்பாய்வு, மாமிச உணவு வகைப் பகுப்பாய்வு, பழப்பாகு பழரச வகை மற்றும் பழ உற்பத்திகளின் பகுப்பாய்வு, வினாகிரி பகுப்பாய்வு, எண்ணெய் மற்றும் கொழுப்பு பரிசோதனை, குடி நீர் பரிசோதனை மற்றும் கழிவு நீர் பரிசோதனை பற்றிய அறிவு.<br><br>**ஆய்வுகூட பாதுகாப்பு**<br><br>உபகரணப் பயன்பாடு, அரிக்கும் இரசாயனப் பொருட்களின் பயன்பாடு மற்றும் பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளை அகற்றுதல் தொடர்பான அறிவு |

**08. பொது நேர்முகத்தேர்வு**

**அடைந்துகொள்ள எதிர்பார்க்கும் நோக்கங்கள்**

அடிப்படைத் தகைமைகளைப் பரிசீலித்தல் மற்றும் உடல் தகுதி தொடர்பாக பரிசோதிக்கும் பொருட்டு நடத்தப்படும். புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

**நியமிக்கும் அதிகாரி - மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு**

**09. சேவை நிபந்தனைகள்:**

(அ) அரசாங்க சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கும் 2019.11.13 ஆம் திகதி மேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட மேல் மாகாண சபையின் கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதாரத் திணைக்களத்தின் தொழில்நுட்ப சேவையின் ஆய்வுகூட தொழில்நுட்ப வல்லுநர் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் குறித்த பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் இதனகத்துப் பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கும் இலக்கம் 2364/32 மற்றும் 2023.12.29 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை விதிகளுக்கமைவாக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதாரத் திணைக்களத்தின் தொழில்நுட்ப சேவையின் ஆய்வுகூட தொழில்நுட்ப வல்லுநர் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

(ஆ) திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதாரத் திணைக்களத்தின் தொழில்நுட்ப சேவையின் ஆய்வுகூட தொழில்நுட்ப வல்லுநர் தரம் III இற்கு நியமிக்கப்படும் அலுவலர் ஒருவர் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்பட்டவர் ஆவார். மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதாரத் திணைக்களத்தின் தொழில்நுட்ப சேவையின் ஆய்வுகூட தொழில்நுட்ப வல்லுநர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருடங்களுக்குள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்திடைய வேண்டும்.

(இ) 2020.10.16 ஆந் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 18/2020 மற்றும் அவ்வப்போது அதில் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு இணங்க பரிந்துரைக்கப்பட்ட இரண்டாவது அரசகரும மொழியில் தேர்ச்சி பெற வேண்டும்.

10. **பரீட்சைக் கட்டணம்:**

அனைத்து விண்ணப்பதாரிகளும் இப்பரீட்சைக்கான கட்டணமாக ரூ 1200/- ஐ மேல் மாகாண சபைக்கு செலுத்த வேண்டும். இக்கட்டணத்தினை மேல் மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் மேல் மாகாண வருமானத் தலைப்பு 20-03-02-99 இற்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் வரவு வைத்து பணமாகச் செலுத்தி தமது பெயரில் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் அதற்குரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை எதிர்கால பயன்பாட்டுக்காக தம்முடன் வைத்திருத்தல் வேண்டும். இப் பரீட்சைக் கட்டணம் எக்காரணத்திற்காகவும் மீளளிக்கப்படவோ, வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவோ மாட்டாது. என்பதனை கருத்தில் கொள்ளவும்.

11. **விண்ணப்பிக்கும் முறை** :

I. அனைத்து விண்ணப்பதாரிகளும் www.psc.wp.gov.lk எனும் எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் நுழைந்து விண்ணப்பம்கோரும் அறிவித்தலின் படி எமது இணையத்தளத்தில் பதிவேற்றம் (Upload) விண்ணப்பப்படிவத்தினை தரவிறக்கம் செய்யலாம்.

II. பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள், அடிப்படைத் தகுதிகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல்கள் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.

III. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்-

விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். தற்போது மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்களின் கையொப்பம் உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு விண்ணப்பப் படிவம் உரிய திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பப்பட வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், பிரதேசத்தின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி தரத்தின் அலுவலர் அல்லது அரச/ மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலர், பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி, ஏனைய மதங்களைச் சார்ந்த மதகுருவாக கருதத்தக்க அளவிலான நிலையில் இருக்கும் ஒரு மதகுரு ஆகியோருள் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

IV. நிகழ்நிலை ஊடாக விண்ணப்பிக்க க் கூடிய இறுதித் திகதி – **2026.02.09**

V. அனைத்து விண்ணப்பதாரிகளும் எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரவேசித்து நிகழ் நிலை ஊடாக **2026.02.09** ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்பதோடு சரியாக பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தினை தரவிறக்கம் செய்து விண்ணப்பதாரியின் கையொப்பத்துடன், கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின் **2026.02.16** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். இத்தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர். (ஆட்சேர்ப்புப் பிரிவு)
மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,
இலக்கம் 628, 10 வது மாடி,
ஜனஜய சிட்டி கட்டடம்,
நாவல வீதி,
ராஜகிரிய.

விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “ மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதாரத் திணைக்களத்தில் தொழில்நுட்ப சேவையின் ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் தரம் **III** பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025” என கட்டாயமாக குறிப்பிட வேண்டும்.

VI. தபாலில் தொலைந்த அல்லது கால தாமதமாகிய விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப்பாடும் கருத்திற்கொள்ளப்படாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதிப்பதால் ஏற்படும் விளைவுகளை விண்ணப்பதாரர்களே ஏற்கவேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது.

VII. காலதாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவ்விதத்திலும் கருத்திற் கொள்ளப்படாது

VIII. இவ் விண்ணப்பங்கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மற்றும் வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது முழுமையாக பூர்த்திசெய்தல் அல்லது பூர்த்தி செய்யாது இருத்தல் பற்றிய இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும். இந்த ஆட்சேர்ப்பினை பிற்போடுதல், இரத்துச்செய்தல் அல்லது நடைபெற்ற பின்னர் தேர்வு செய்தல்/ செய்யாதிருத்தல் தொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

IX. வர்த்தமானி அறிவித்தலின் படி தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் எனக் கருதப்பட்டு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய முறையில் விண்ணப்பத்தினை பிழையின்றி நிரப்பி அனுப்பும் விண்ணப்பதாரிகள் தகுதிகளைப் பூர்த்தி செய்ததாக கருதப்பட்டு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுதல் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதை ஏற்றுக் கொண்டதாக கருதப்படலாகாது. விண்ணப்பதாரி தகுதிகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத்தெரிய வரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சைக்கான விண்ணப்பத்தாரி நிலையினை இரத்துச் செய்வதற்கும் மற்றும் நியமனம் வழங்குவதை நிராகரிப்பதற்கும் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

X. உரிய தினத்தில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்காத விண்ணப்பதாரிகள் தொடர்பாக எவ்வகையிலும் மறுபரிசீலனை செய்யப்பட மாட்டாது. மேலும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினத்தில் அனைத்து சான்றிதழ்களும் முன்வைக்கப்பட வேண்டும் என்பதோடு பின்னர் சமர்ப்பிக்கும் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**12. பரீட்சைக்கு அனுமதித்தல் :**

(அ) பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சை இடம்பெறும் தினத்தில் பரீட்சை மண்டபத்தின் பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

**13. விண்ணப்பதாரியின் ஆளடையாளம் :**

பரீட்சை அனுமதிப்பத்திரம் இல்லாத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார். மேலும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தோற்றும் அனைத்து பாடங்களின் போதும் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதன் பொருட்டு கீழ்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

பரீட் சார்த்திகள் தமது ஆளடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் முகத்தை மறைக்காத வகையிலும் மற்றும் இலத்திரணியல் தொடர்பு சாதனங்களை அணியாமலும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்கும் போது காதுகளை மறைக்காத வகையில் உடையணிந்து பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை ஆரம்பித்தது முதல் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகளை மறைக்காமல் இருக்க வேண்டும்.

14. **தெரிவு செய்யும் முறை :**

இப்பதவிக்காக நடத்தப்படும் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான நேர்முகப் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டு (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது) பின்னர் தகைமையுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர். (நியமனம் வழங்கப்படும் போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய நியமனம் வழங்கப்பட வேண்டிய இறுதி முன்னுரிமை நிலையில் சமமான புள்ளிகள் பெற்ற பல விண்ணப்பதாரிகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த சமமான புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு மீண்டும் எழுத்துப் பரீட்சை நடாத்தப்பட்டு அதன் திறமைகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்)

15. **தவறான தகவல்களுக்கான தண்டணைகள் :**

விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு அமைய எவரேனும் விண்ணப்பதாரி ஒருவரால் தகைமையற்ற / பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை அறியக்கிடைக்குமிடத்து பரீட்சை இடம்பெற முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சை இடம்பெற்ற பின்னரான எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் விண்ணப்பதாரியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். நியமனம் கிடைக்கப்பெற்ற பின்னர் தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை / சரியான தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்படுமிடத்து அவர் மேல் மாகாண அரசாங்க சேவையில் இருந்து பணிநீக்கம் செய்யப்படலாம்.

16. பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அனைத்து விண்ணப்பதாரிகளும் உட்பட்டவர்களாவர் குறித்த விதிகளை மீறுமிடத்து அவர்கள் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் எந்தவொரு தண்டனைக்கும் உட்படுத்தப்படலாம்

17. இப்ரீட்சையினை நடத்துதல், பரீட்சையினை இரத்துச் செய்தல், பிற்போடுதல், அல்லது பரீட்சை பெறுபேறுகளை இடைநிறுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய இவ்விண்ணப்பம்கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பான இறுதி தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை தொடர்பான பொதுவான ஒழுங்குவிதிகளுக்கு அமைய செயற்பட இணங்கியுள்ளனர்.

18. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில சொற்களுக்கிடையே ஏதும் ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்களச் சொல்லே அதிகாரம் பெறும். மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில்

திலக் செனரத்,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

தொலைபேசி - 011 2879614
தொலைநகல் - 011 2879512
மின்னஞ்சல் - ppscwprec@sltnet.lk

## மாதிரி விண்ணப்பப்படிவம்

## மேல் மாகாண அரசாங்க சேவை - கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதாரத் திணைக்களத்தில் தொழிநுட்ப சேவையின் ஆய்வக தொழிநுட்ப வல்லுநர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான (திறந்த) போட்டிப் பரீட்சை - 2025

பரீட்சை சுட்டெண் [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (உரிய எழுத்தினை கூட்டில் எழுதுக)

சிங்களம் - S
தமிழ் - T
ஆங்கிலம் - E

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
(உ+ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர்(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் )
( உ+ம்: H.M.S.K.GUNAWARDHANA)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்)

1.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்

02. 2.1 ஆண்/ பெண்

03. 3.1 விவாகமானவர்/ விவாகமாகாதவர்-

3.2 பிறந்த திகதி

| D | D | M | M | Y | Y | Y | Y |
|---|---|---|---|---|---|---|---|

3.3 விண்ணப்ப முடிவுத் திகதிக்கு வயது

| D | D | M | M | Y | Y | Y | Y |
|---|---|---|---|---|---|---|---|

04. 4.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்)

4.2 பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி:

i. (சிங்களத்தில்/ தமிழில்)

ii. ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் -

4.3 பிரதேச செயலாளர் பிரிவு (சிங்களத்தில் மட்டும்)

4.4 மேல் மாகாணத்தில் தொடர்ச்சியாக வசிக்கும் காலம்

4.5 மின்னஞ்சல் முகவரி

4.5 தொலைபேசி இலக்கம்

4.6 தகவல்களைத் தெரிவிப்பதற்கான பயன்பாட்டில் உள்ள கையடக்கத் தொலைபேசி இலக்கம்

❖ பரீட்சை தொடர்பான அனைத்து தகவல்களும் மேற்படி கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு SMS முறை ஊடாக அனுப்பப்படும் என்பதால் பயன்பாட்டில் உள்ள தொலைபேசி இலக்கத்தினைக் குறிப்பிடுக. SMS செய்திகள் கிடைக்காமை தொடர்பாக பின்னர் மேற்கொள்ளப்படும் புகார்கள் பரிசீலிக்கப்படாது.

05. **கல்வித் தகைமைகள் :**

5.1 க.பொ.த. (சாதாரண தர) பெறுபேறுகள்

| | | |
|---|---|---|
| i. பரீட்சை இடம் பெற்ற வருடம் மற்றும் மாதம் : | முதல் சந்தர்ப்பம் | |
| | | |
| ii. சுட்டெண் | | |
| iii. பெறுபேறு | பாடம் | பெற்றுக் கொண்ட சித்தி |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

5.2 கல்விப் பொது தராதர (உயர் தர) பெறுபேறுகள்:

| | | |
|---|---|---|
| i. பரீட்சை இடம் பெற்ற வருடம் மற்றும் மாதம் | | |
| ii. சுட்டெண் | | |
| iii. பெறுபேறு | பாடம் | பெற்றுக் கொண்ட சித்தி |
| | | |
| | | |
| | | |
| | | |

5.3 பரீட்சை அறிவித்தலில் 4.2 பந்திக்கமைய இப்பரீட்சைக்குத் தோற்றுவதன் பொருட்டு நீங்கள் பெற்றுள்ள தொழிற்தகைமைகள் தொடர்பான பயிற்சிநெறி / தகைமை தொடர்பான விபரங்கள்

| சிங்களம்/ ஆங்கிலத்தில் |
|---|

I. பல்கலைக்கழகம் / நிறுவனம்

II. பெற்ற டிப்ளோமா

| சிங்களம்/ ஆங்கிலத்தில் |
|---|

III. டிப்ளோமா பெற்ற திகதி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

IV. இலங்கை இரசாயனவியல் நிறுவனத்தின் கௌரவ இணை அங்கத்துவம் (L.I.Chem C.) பெற்றுள்ளீரா? :

V. ஏனைய தகைமைகள் :……………………………………………………………….

(மேற்படி தகைமைகளை நிரூபிப்பதற்கான சான்றிதழ்/ ஆவணங்களை இணைக்கவும் )

06. நீங்கள் எப்பொழுதேனும் ஏதேனும் குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

| ஆம் /இல்லை |
|---|

6.1 மேற்படி பதில் ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடுக

…………………………………………………………………………………………………………………….

07. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலாளர் அலுவலகம் ……………………………………………

பற்றுச்சீட்டு இலக்கம் - ……………………………………………………………………………………..

திகதி - …………………………………………………………………………………………………………

பற்றுச்சீட்டை UPLOAD செய்க

| பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலம் பிரதியை கழன்று விடாதவாறு இங்கு ஒட்டவும் |
|---|

| பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலம் பிரதியை கழன்று விடாதவாறு இங்கு ஒட்டவும் |
|---|

( பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பணம்செலுத்திபெற்ற மே.மா 1 மட்டும்செல்லுபடியாகும்)

08. விண்ணப்பதாரியின் உறுதியுரை

……………………………………………………………………………………………………………

……………………………………………………………… ஆகிய என்னால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு ஏற்ப உண்மையானவை என தெரிவிக்கிறேன்.நான் வழங்கிய

தகவல்கள் தவறானவை /பிழையானவை என தெரியவருமிடத்து_மேல் மாகாண அரசாங்க சேவையின் கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதாரத் திணைக்களத்தில் தொழிநுட்ப சேவையின் ஆய்வக தொழிநுட்ப வல்லுநர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எனது உரிமை புறக்கணிக்கப்படும் என்பதையும் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைமேற்கொள்ளப்படநேரிடும் என்பதையும் அறிவேன்

திகதி ……………………… ……………………………………………
விண்ணப்பதாரியின் ஒப்பம்

09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்

இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ……………………………………………………………என்பவரை எனக்குத் தனிப்பட்டமுறையில் தெரியும் எனவும் அவர் …………………………………திகதி எனது முன்னிலையில் ஒப்பமிட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

……………………………………………
கையொப்பத்தினை உறுதிப்படுத்துபவரின்
ஒப்பம் மற்றும் பதவி முத்திரை

திகதி : …………………………………………………………………………………
அத்தாட்சிப்படுத்துபவரிகன் முழுப்பெயர் : …………………………………………………………………………………
பதவி : …………………………………………………………………………………
முகவரி : …………………………………………………………………………………

10. விண்ணப்பதாரி அரச அலுவலராயின் நிறுவனத் தலைவரின் அத்தாட்சி

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ……………………………………… இவ்வலுவலகத்தில்/ நிறுவனத்தில் ………………………………… திகதி முதல் இற்றை வரை (பதவி) நிரந்தர /தற்காலிக/ அமைய (அவசியமற்ற சொற்ககளை கீறிடுக) பதவியில் கடமையாற்றும் அவரது சேவை திருப்திகரமானது எனவும், இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நியமனத்திற்கு அவர் தெரிவு செய்யப்படுமிடத்து தற்போதைய பதவியில் இருந்து அவரை விடுவிக்க முடியும் / முடியாது எனவும் மேற்படி தகவல்கள் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

……………………………………………
திணைக்களத் தலைவரின் ஒப்பம் மற்றும் பதவி முத்திரை

திகதி : …………………………………………………………………………………
அத்தாட்சிப்படுத்துபவரிகன் முழுப்பெயர் : …………………………………………………………………………………
பதவி : …………………………………………………………………………………
முகவரி : …………………………………………………………………………………

01-171

திருத்தம்

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

**மத்திய மாகாண அரசாங்க சேவையில் முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பப் பிரிவு 03 சேவை வகுதியில் தொழில்நுட்ப உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025 இற்கான விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியினை நீடித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 2,469 மற்றும் 2025.12.26 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையின் மாகாண சபைகள் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட மத்திய மாகாண அரசாங்க சேவையில் முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பப் பிரிவு 03 சேவை வகுதியில் தொழில்நுட்ப உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியானது 2026.01.30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத் தருகின்றேன்.

02. அவ் ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் எத்தகைய மாற்றமும் இன்றி அவ்வாறே நிகழும் எனவும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கே. கே. ஜி. ஐ. டி. பீ. விஜேதிலக,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாண சபை.

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி.

01-181